# விடியலைத் தேடும் இரவுகள்



விவேகானந்தனூர் சதீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலைத் தேடும் இரவுகள்

விவேகானந்தனூர் சதீஸ்

வெளியீடு

**காவியாலயா வெளியீடு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்யுள் விபரம்

**நூலின் பெயர்**

விடியலைத் தேடும் இரவுகள்

*(கவிதைத் தொகுப்பு)*

**ஆக்கியோன்**

திரு.செ.சதீஸ்குமார்

*(விவேகானந்தனூர் சதீஸ்)*

*Dip in Journalism & Human Rights*

**முதற்பதிப்பு**

*2016* கார்த்திகை

**இரண்டாம் பதிப்பு**

*2017* சித்திரை

**பதிப்புரிமை**

திருமதி.செ. மகேஸ்வரி

"காவியாலயா"

இல. *177,* விவேகானந்தநகர் கிழக்கு, கிளிநொச்சி.

தொலைபேசி: *077-4823465*

மின்அஞ்சல் : *poetsathiesh@gmaili.com*

**வெளியீடு**

படைப்பாளிகளின் உலகம்

**அச்சுப்பதிப்பு**

தேவி Printers, Jaffna. 021 300 3030

*ISBN978-955-54448-1-1*

*Price : Rs 250/=*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கை சிறைக் கூண்டுக்கு(ள்)**
**இரையாகி விதையான**
**ஈழத்தமிழ் அரசியல் கைதிகளுக்கு**
**இந்நூல் அர்ப்பணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவுக்குள்......


| | | |
|---|---|---|
| 1. | விநாயகா உன்னிடம் | 1 |
| 2. | அந்த நாள் | 2 |
| 3. | கரைச்சி எழில் | 3 |
| 4. | அவலத்தின் பறை | 4 |
| 5. | உடைந்த வளையல்கள் | 5 |
| 6. | நாடும் நாமும் | 6 |
| 7. | முதல் வரிகள் | 7 |
| 8. | தெரியாது | 8 |
| 9. | நிலைக்கவில்லை | 9 |
| 10. | தண்டனை | 9 |
| 11. | காதலர் தினம் | 10 |
| 12. | காதலாம் | 10 |
| 13. | சந்திப்பு | 11 |
| 14. | சகோதரரே | 12 |
| 15. | அபகரிப்பு | 14 |
| 16. | முரளி | 15 |
| 17. | முதிர்கன்னி | 16 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 18. | சொந்தம் | 16 |
| 19. | தமிழனாய் வாழ்வேன் | 17 |
| 20. | பணம் | 17 |
| 21. | உயிர்கொல்லி | 18 |
| 22. | பூப்படைந்து | 19 |
| 23. | வடிவம் | 20 |
| 24. | சந்திப்புக்கள் | 21 |
| 25. | க(ந)னவா? | 22 |
| 26. | விடுப்பு | 23 |
| 27. | சீரிய வாழ்வுக்கு | 24 |
| 28. | முடியாத ஏக்கங்கள் | 25 |
| 29. | சத்தியம் | 26 |
| 30. | தூக்கம் | 26 |
| 31. | ஒன்றுபடுவோம் | 27 |
| 32. | எம்மூர்ப் பனைகள் | 28 |
| 33. | கவிதாயினி | 29 |
| 34. | மண்தின்ற கொஸ்லந்தை | 30 |
| 35. | ஆத்தா உனக்கு | 32 |
| 36. | விழி உள்ள பெரியோரே | 33 |
| 37. | மார்ச் - 08 | 34 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 38. | சிறையில் வைத்து | 35 |
| 39. | இரும்புக்கம்பி | 36 |
| 40. | கண்ணீர் | 37 |
| 41. | எனது ஊருக்கு | 38 |
| 42. | வழிகாட்டு | 38 |
| 43. | கையூட்டல் | 39 |
| 44. | ஆதங்கம் | 40 |
| 45. | வடக்குத் தமிழன் | 41 |
| 46. | கந்தா கூறு | 42 |
| 47. | அன்றும் இன்றும் | 43 |
| 48. | சிறையறை நினைவு | 44 |
| 49. | பொன்னாடை | 45 |
| 50. | இன்றைய வாழ்வு | 45 |
| 51. | கிளிநொச்சியூர் | 46 |
| 52. | காரணம் யார்? | 47 |
| 53. | நினைக்கலாமா? | 48 |
| 54. | என்னவர் நினைவுடன் | 49 |
| 55. | எமக்காகவும் | 50 |
| 56. | விடியலைத் தேடும் இரவுகள் | 51 |
| 57. | ஆடிப்பிறப்பு | 52 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 58. | ஆளுக்கொரு மரம் நடுவோம் | 53 |
| 59. | சீரழியும் சிறு முத்துக்கள் | 55 |
| 60. | சிந்தித்துப் பார் | 56 |
| 61. | எழுதமுடியா நினைவுகள் | 57 |
| 62. | புனித(ர்) நிலம் | 58 |
| 63. | மனித நேயம் | 59 |
| 64. | அலுவலக நாட்கள் | 60 |
| 65. | காதல் மொழி | 61 |
| 66. | இணைந்த இருமனங்கள் | 62 |
| 67. | வாழ விடு | 62 |
| 68. | நெருடல் | 64 |
| 69. | வலி | 65 |
| 70. | வேறுபாடு | 65 |
| 71. | ஹைக்கூ | 66 |
| 72. | அவனும் நானும் | 68 |
| 73. | கௌரவச் சிறை | 69 |
| 74. | துடிப்பு | 70 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன நிறைவோடு...

"தாயிற் சிறந்த கோயிலுமில்லை
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை"

எனும் பழமொழிக்கமைய வளர்ந்தும் வாழ்ந்தும் வரும் என் அருமை மகன் "விவேகானந்தனூர் சதீஸ்" மூடிய சிறையிலிருந்து முத்தான முத்தமிழை சிந்தையில் கொண்டு மனதில் வெந்திடும் விடயங்களுக்கு உயிர் கொடுத்து, வரியாக செதுக்கி "விடியலைத் தேடும் இரவுகள்..." கவிநூலை வெளியிடுவதில் பெருமை கொள்கின்றேன். மகனின் இன்றைய சிறு துளிகள் நாளைய பெருவெள்ளமாய் நான்கு திசையிலும் ஆல விருட்சம் போல் அகலக் கிளை பரப்பி எட்டுத் திக்கும் சிறப்புறவும் சிறை மீண்டு வரவும் இறையருள் கொண்டு நிறைவோடு வாழ்த்துகின்றேன்.

அன்புள்ள அம்மா

**திருமதி செ. மகேஸ்வரி**

2016.05.01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவியமாகும் நினைவுத் துளிகள்

வண்ணத் தமிழில்
எண்ணங்கள் கிளைவிட்டு
நினைவுத் துளிகள் காவியமாகிறது !

குடியிழந்த தமிழன் கதை
குடிபெயர்ந்த உறவுகள் நிலை
கொன்றழித்த கொத்துக் குண்டு
கொடிய போர் வலிகள் என்று
கொட்டி வரைந்த கவி
குடிகொள்ளும் எம் நெஞ்சில் !

சீரழியும் கலாசாரம் கண்டு
சிதைவுறும் பண்பாடுகண்டு
சிறைச் சுவருக்குள் நின்று
சீர்படுத்த முனையும் உந்தன்
செந்தமிழ் எழுதுகோல்
செவ்வனே பயணிக்கட்டும் !

மனித உரிமையுடன்
மகத்தான ஊடகவியலை
ஒப்புயர கற்றொழுகும்
சமூகப்போராளி உன் விடிவு
சமூகத்தை சீர்படுத்தட்டும்
சக வாழ்வு மலரட்டும் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் சதுரங்கத்தில்
ஆயுள்கைதியாய் ஆயினும்
ஆண்ட தமிழனுக்கு
அழியாத வரலாறென்ற
அடிபணியா உன் எண்ணம்
அடிமை சிறையிலும்
அகல வில்லை !
குருதியில் குளித்த இறுதிநாட்கள்
கண்ணீர் கனத்த கருகிய தருணம்
மனங்கள் ரணமான
முள்ளிவாய்க்கால் நினைவுகளென
கவியில் முன்னிறுத்தி விட்டாய்
எம்
கண் முன்னே !

உன்
"விடியலைத் தேடும் இரவுகள்.... " கனவு
நனவாய் மாறும் நற்காலம்
விரைவில் பு(ம)லர
வாழ்த்துகிறேன் நித்தமும் !

**கொட்டடி கோமகன்**
யாழ்ப்பாணம்
2016.05.15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பொது வெளியின் பயன் என்ன?

"என்னதானிருந்தாலும் ஒருவருக்கான உலகை மறுப்பதும் வாழ்க்கையை மறுப்பதும் குற்றமல்லவா?" இப்படி ஒரு கேள்வி நான் சிறையிலிருந்த போது எனக்குள்ளே எழுந்தது. அது1989இல்அரசியற்காரணத்துக்காககைதுசெய்யப்பட்டுச் சிறைவைக்கப் பட்டிருந்தேன். சிறை என்பது எப்பொழுதும் சிறையிருப்பவருக்கும் உலகத்துக்குமிடையிலான தொடர்புகளைத் துண்டிக்கிறது. அதிகம் ஏன் குடும்பத்துடன், வீட்டுடனான தொடர்புகளையே தடுத்து விடுகிறது. இது ஒரு மிகக் கடுமையான தண்டனைப்பொறி, அங்கே கட்டுப்படுத்தப் பட்டிருக்கும் அதிகாரம், தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அல்லது சிறை வைக்கப்பட்டிருக்கும் நபரை தனிமைப்படுத்திக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது. இதன் மூலம் ஒருவர் உளவியல் ரீதியாகவும் நடைமுறையிலும் பலவீனப்படுத்தப்படுகிறார். இதில் அரசியற் கைதிகளின் நிலையைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. அவர்கள் பலவகையிலும் குறிவைக்கப் பட்ட ஓரிலக்கு.

பிற குற்றச் செயல்களுக்காக கைது செய்யப்படுவதும் சிறை வைக்கப்படுவதும் வேறு. அரசியற் காரணங்களுக்காகக் கைது செய்யப்படுவதும் அதற்கான விசாரணைகளை எதிர்கொள்வதும் சிறை வைக்கப்படுவதும் வேறு, அரசியற் காரணங்களிற்கான கைதின் போது நேரடியாக அரசு சம்பந்தப்படுகிறது. ஆகவே இந்தக் கைதுகள் உச்ச அதிகாரப் பிரயோகத்துக்குள்ளானவை. கைதின் பிறகான விசாரணை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கு, வழக்கற்ற தடுப்பு நிலை, சிறைத்தண்டனை போன்ற எல்லாமே அரசியற் காரணங்களின் அடிப்படையிலும் அரசின் உளவியல், அதனுடைய மையச்சிந்தனையின் படியும் தான் நடக்கும். ஆகவே அரசியற் கைதிகள் சந்திக்கின்ற நெருக்கடி உளவியல் ரீதியாகவும், பௌதீக ரீதியாகவும் பெரும் தாக்கத்தை உண்டாக்குகின்றவை. இப்படியான தாக்கத்தை பாதிப்பை அரசியற் கைதிகள் அடைய வேண்டும் என்ற இலக்கோடு தான் அவர்கள் இந்தத்தண்டனை முறைக்குட்படுத்தப்படுகிறார்கள். கைதியின் அகத்தையும் புறத்தையும் சிதைக்கும் நோக்கம் இது. உலக வரலாற்றில் அரசியற் கைதிகளே உச்ச தண்டனையை அனுபவித்திருக்கிறார்கள். சிலுவையிலறையப்பட்ட யேசு கிறிஸ்து, நம் காலத்தில் அரசியற் கைதிகளுக்கான ஒரு அடையாளமாயிருந்த நெல்சன் மண்டேலோ உள்ளடங்கலாக இந்தக் கவிதைகளை எழுதியிருக்கும் சதீஸ் எனத் தொடர்ந்து கொண்டிருக்கிற வதைப்பட்டவர்களின் தொடர் கதை இது.

சதீஸ் "அரசியற் கைதி" என்ற அடையாளப்படுத்தலின் கீழ் இலங்கைச் சிறையில் இருக்கிறார். எப்பொழுது விடுவிக்கப்படுவேன் என்று சதீசுக்கும் தெரியாது. எப்பொழுது அவர் விடுவிக்கப்படுவார் என்று அவருடைய உறவிர்களுக்கும் தெரியாது. ஏன் அரசாங்கத்துக்கோ அதனுடைய நீதித்துறைக்கோ கூட சதீஸ் போன்றவர்கள் எப்போது விடுவிக்கப்படுவார்கள் என்று தெரியாது. கைதிகளுக்கான தண்டனை, அவர்கள் தங்களைத் திருத்தம் செய்து கொள்வதற்கான பொறியமைப்பு என்பதற்கு அப்பால், இதை அவதானிக்கின்ற வெளியாட்கள் ஒரு போதும் அரசுக்கும் அதனுடைய அதிகாரத்துக்கும் எதிராகச் சிந்திக்கவே கூடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்கேற்ற வகையில் அச்சுறுத்தலை உண்டு பண்ணும் நோக்கத்தையுடைய சிறைவைப்பு. ஆகவே, அந்த நோக் கத்தை எட்டுவதையே அரசு குறியாகக் கொள்ளும். எனவே முடிந்த வரையில் இவர்களுடைய விடுதலை என்பதை தீர்மானங்களற்று அது திட்டமிட்டுத் தாமதப்படுத்தும். இத னால், எந்த முடிவும் தெரியாமலே போய்க் கொண்டி ருக்கின்றன நாட்கள், ஆனால், யாரும் கவனிக்கப்படாமலே, ஒரு இளைஞரின் வாழ்க்கை அழிகிறது. இளைமை கரைந்து கொண்டிருக்கிறது. ஊக்கத்துடன் செயலாற்றக் கூடிய மனமும் உடலும் காலத்தால் கழிக்கப்பட்டுக் கொண்டிருக் கின்றன. இப்படியான ஒரு நிலையில் தான், இன்றைய தேதியில் உலகம் முழுவதிலும் சதீஸைப் போல பல லட்சக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். இது மிகப் பெரிய அரசு வன்முறை. நீதியமைப்பின் மிகவும் உச்சமான தவறும் குற்றமுமாகும். குற்றவாளியாக இருந்தாலும் கூட ஒருவருக் கான தண்டனையை முன்னூறு நானூறு ஆண்டுகால புராதன முறைமையில் வழங்குவது எந்த வகையில் சரி யானது? இலங்கையில் இன்னும் இருப்பது பிரிட்டிஸ் ஆதி பத்தியத்தின் நிழல் படிந்த சட்டமும் நீதியமைப்பும் தான். உழுத்துப் போன முறைமை இது. கால நீட்சியில் பல மாற் றங்கள் உலகில் உருவாகி விட்டது. சட்டத்திலும் நீதி அமைப் பிலும் மட்டும் ஓட்டைகளைத் திரும்பத்திரும்பப் பொத்திக் கொண்டிருக்கின்றார்கள். நீதி அமைப்பும் சட்டமும் அதிகார வர்க்கத்தின் பாதுகாப்புக் கவசங்கள். மறுவடிவமாகச் சொன் னால் ஒடுக்குமுறைக் கருவிகள். சமூகத்தைப் பாதுகாப் பதற்கான ஏற்பாடுகளே சட்டமும் நீதியமைப்பும் என்று சொல் லப்படுவது பாதியிலும் குறைந்தளவே உண்மையானது. சமூகத்தைப் பாதுகாப்பு என்பது. அந்தந்தச் சமூகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கி வைத்திருக்கும் பண்பாட்டு உருவாக்கங்கள், அற நிலைப்பாடுகளின் வழியாக நிகழ்ந்து கொண்டிருப்பது. அதில் மீறல்கள் நிகழும் போது சட்டமும் நீதியமைப்பும் ஒரு கவசமாக இருக்கிறதேயொழிய அதிகாரத் தரப்புகளுக்கு இவை செய்கின்ற சேவகம் அளவுக்கு சமூகத்துக்குச் செய் வதில்லை.

சட்டத்தை முன்னிறுத்தியும் நீதியை வழிமொழிந்தும், இதற்கான மறுப்புகளைச் சொல்லி யாரும் வாதிடலாம். ஆனால், அரசு ஒன்றானது தன்னுடைய பிரஜையைச் சிறை வைத்திருக்கும் போது அந்த மனிதரைச் செயலிழக்க வைக்கிறது என்பதை மறுக்க முடியாது. இப்படி உழுத்துப் போன சட்டத்தின் இரும்புக்கரம் கொண்டு ஆயிரக்கணக் கானவர்களை அது உருக்குலைத்து வருகிறது. மனிதர்களின் மீதான அக்கறையை விடவும் அரசைப் பாதுகாக்க வேண்டும் என்ற பெரு விருப்பின் வெளிப்பாடானது. அரசுகள் அத்த னையும் இரும்பையும் விடக்கடினமான இதயத்தைக் கொண் டவை என்பதில் சந்தேகமேயில்லை. இரும்பு கூட அதிக வெப்பத்தைக் கொடுத்தால் நெகிழ்ந்து கொடுக்கும். ஆனால், அரசுகளின் இதயம் அப்படியெல்லாமில்லை. அவை மிக இறுக் கமானவை.

ஒருவரைச் சிறை வைப்பது என்பது அரசுக்கும் நாட் டுக்கும் சமூகத்துக்கும் பெரு நட்டமாகும். தவிர, சிறையி ருக்கும் ஒவ்வொரு மனிதருடைய அடிப்படை மனித உரிமை மீறலுமாகும். குற்றாவளி எனப்படும் தனி நபரை, அல்லது குற்றம் சாட்டப்பட்ட நபர்களைத் தண்டிக்காது விட்டால் அவர்களால் மிகப் பெரிய அனர்த்தங்கள் உண்டாகி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது ஏற்படும் பாரிய அழிவை விடவும் அத்தகைய அழிவை உண்டாக்கக் கூடியவர்கள் இப்படித் தனியாட்களோ சிறு குழுக்களோ தண்டனை அனுபவிப்பது ஒன்றும் குறையில்லை என்று வாதிடுவோர் உள்ளனர். இது முடிவற்ற விவாதத்தில் "முட்டை முதலில் வந்ததா? கோழி முதலில் வந்ததா?" என்று தான் போய் முடியும். ஆனால் யாதார்த் தத்தில் சிறையிருக்கும் அரசியற் கைதிகளில் பெரும்பா லானவர்கள் அதிகாரத்தரப்பின் உளவியல் அச்சத்தின் பலிக் கடாக்களாவே சிறைக் கூண்டுகளின் அடியில் மக்கிக் கொண் டிருக்கிறார்கள். சதீசும் அவர்களில் ஒருவர்.

பெரும்பாலான அரசியற் சிறையாளிகள், சும்மா இருக்க முடியாதவர்கள். அவர்களுடைய இயங்குதளம் எழுத்தும், வாசிப்பும், உரையாடல்களுமாக மாறி விடுகிறது. அதாவது இயங்கு நிலையாக சதீஸ் படிக்கிறார் எழுதுகிறார். அப்படி எழுதப்பட்ட கவிதைகளின் மேலுமொரு தொகுதி இங்கே நூலாக வெளியிடப் படுகிறது. ஏற்கனவே 2013இல் "இரும்புக் கதவுக்குள் இருந்து.." என்ற நூலை வெளி யிட்டிருக்கிறார். இது ஒரு தீவிர முனைப்பின் வெளிப்பாடு. இயங்கு நிலைக்கான சாட்சியம். சதீஸின் இந்த முனைப் பையும் முயற்சியையும் நாம் மனங்கொண்டு ஆதரிக்க வேணும். அவருடைய எழுத்தைப் பார்ப்பதை விடவும் அவருடைய நிலைமையைப் புரிந்து கொள்வதே இன்றைய நிலையில் முக்கியமானதாக உள்ளது. இந்தக் கவிதைகள் குறித்த உரையாடல்களுக்கு முன்பு, சதீஸின் விடுதலை பற்றியும் அவரைப் போன்றவர்களின் விடுதலையைப் பற்றியுமே நாம் உரையாட வேண்டியுள்ளது. ஏனென்றால் இந்தக் கவிதைகளுடன் என்னிடம் வந்திருந்த சதீஸின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா உட்பட சதீஸைப் போன்றவர்களின் உறவினர்கள் எல்லோரும் படுகின்றதுயரமும் அலைச்சலும் இந்தக்கவிதைகள் செய்கின்ற இடையீட்டை விட அதிகமான இடையீட்டை, துயரழுத்தத்தைத் தருகின்றது. அரசியல் என்ற பொதுப் பணியின் நிமித்தமாக சிறைக்குள் தள்ளப்பட்டிருக்கும் தங்கள் உறவுகளை மீட்பதற்கு எத்தகைய அரசியல் பொதுமைகளும் பயன்படவில்லை, என்ற கையறு நிலையில் உடைந்து நொருங்கிய இந்த மனிதர்களுக்கும் நமது பொது வெளியின் பதில் என்ன? தமக்கெனச் சுய வட்டத்துக்குள் சிந்தித்தும் செயற்பட்டுமிருந்தால் இன்று இந்த மனிதர்கள் சிறைக்கூடுகளுள் சிக்கியிருக்க வேண்டியிருந்திருக்காது. உறவுகளைச் சிறையுள்ளிருந்து மீட்க முடியாமல் தவிர்த்தலைய வேண்டிய அவசியமும் இந்த உறவுகளுக்கு வந்திருக்காது. இதில் கொடுமையான துயரம் என்னவென்றால், அரச அதிகாரமும் ஒடுக்கு முறையும் எப்படி இந்தச்சிறை விவாகாரத்தைக் கையாளுகிறதோ அந்தளவுக்குத்தான் "அரசுக்கு எதிரான அரசியல்" என்ற அடையாளத்தோடுள்ளவர்களின் செயற்பாடுகளும் உள் ளன. " அரசியற் சிறைக் கைதிகளை விடுவிக்க வேணும்" என்று தமிழ்த் தரப்பினால் எழுப்பப்படும் குரலின் பாசாங்குகள் எரிச்சலூட்டுவன. இந்தப் பாசாங்குகள் அரசின் அதிகாரத்துக்கு மேலும் மேலும் வாய்ப்பை அளிப்பன மட்டுமல்ல இந்த விசயத்தைக் கேலிப்படுத்துவனவும் கூட. மெய்யாகவே இந்த அரசியற் கைதிகளை இந்தச் சக்திகள் விடுவிக்க கோருகின்றன என்றால், மெய்யாகவே இவர்கள் அதற்கான போராட்டத்தை முன்னெடுத்திருப்பர். இதை சதீஸின் கவிதைகளே அதிருப்தியுடன் வெளிப்ப டுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தொடரும் தடுப்புக் காவலில்
துலங்காத விடியல் ...........
முடியாத ஏக்கங்களாய் ...."

என்று துயரத்துடன் எழுதுவது இந்தச் சக்திகளின் கையறு நிலையைச் சுட்டுகிறது. அதாவது ஏமாற்றத்தை. ஒரு பக்கத்தில் அரச ஒடுக்கு முறையும் அதிகாரமும் என் றால், அதை முறியடிக்க வல்லமையற்ற எதிர்த்தரப்பின் "போலிப் புரட்சியாளர்"கள் இந்த இடத்தில் இன்னொரு விசயத்தையும் கவனப்படுத்துவது அவசியமெனக்கருதுகி றேன். தமிழ் அரசியற் கைதிகளாகக் கடந்த முப்பது ஆண்டுகளாக இருப்பவர்களில் யாரும் பெருந்த தலைவர்கள் கிடையாது. அத்தனை பேரும் போராளிகளாக ஏதோ ஒரு வகையில் களப்பணியில் செயற்பட்டவர்கள் அல்லது அப் படிக் கருதப்படுகின்றவர்கள். தலைவர்கள் அனைவரும் கைதுக்கும், சிறைக்கும், தண் டனைக்கும் அப்பாலான சுக வெளியில் சுதந்திர நிலை யிலேயே உள்ளனர். எனவே தான் கைதுக்கும், சிறைக்கும், தண்டனைக்கும் விடுதலை விதி யற்றுச் சிறைக்குள் தள்ளப்பட்டிருக்கிறது.

இந்த நிலையிலேயே தன்னுடைய பொது வெளிப் பிர வேசமாகச் சதீஸ் தனது எழுத்துகளை முன் வைக்கிறார்.

"அவன் வேலைக்குச்சென்றான்
நானும் வேலைக்குச் சென்றேன்
அவனுக்கு ஊதியம்
எனக்கு உணவு மட்டும்
அவன் வீட்டுக்குச் சென்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் விடுதிக்குச் சென்றேன்
அவனை வரவேற்றது மனைவி, மக்கள்
என்னை வரவேற்றது சக கைதிகள்
.............................."

எனச் சொல்ல முனைவதை நாம் புரிந்து கொள்ள வேணும்.

"ஆங்கிலேய சிறைக் கூடங்கள்
இன்றைய வதைக்கூடுகள்
என்றிவை மாறுவது சீர்திருத்தப்பள்ளிகளாய்....?"

மிக எளிய வரிகள் தான். ஆனால் இவை கவனப்படுத்தும் விசயமே நமது கவனத்திற்குரியது. மிக எளியதாக மாற்றப்பட்டிருக்க வேண்டிய தண்டனை முறையும் அதனுடைய அமைப்பும் இன்னும் மாற்றறப்படாதிருப்பதைப் பற்றிய கைதியின் விமர்சன வெளிப்பாடு. அதிகாரமும் வளமுமுடைய அரசும் செய்ய வேண்டியவற்றைச் செய்யாதிருந்தது என்று அதிகாரமற்றிருக்கும் கைதி ஒருவர் சுட்டிக்காட்டி, அரசைத் தலைகுனிய வைக்கிறார். உண்மையில் இப்பொழுது கைதியிடமே அதிகாரம் வருகிறது. அவர் இந்த அதிகாரத்தைத் தன்னுடைய விமர்சனத்தின் மூலமாக, அரசின் பொறுப்பற்ற தன்மையைச் சுட்டிக்காட்டும் துணிவின் மூலமாகப் பெற்றுக் கொள்கிறார். பொது வெளியில் இதைக் கொண்டு வரும் போது சதீஸ் பெறுகின்ற கவனமும் பலமும் இன்னும் அதிகமாகிறது.

சிறையிலிருக்கும் போது எழுதப்படும் குறிப்புக்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்புக்களும் உலகின் முக்கிய கவனங்களைப் பெற்றிருக் கின்றன. சிறைக்களமும் சிறைக்காலமும் என்பது சுய சிந்த னையை விரிவாக்கிக் கொள்வதற்கான அருமையான ஒரு களமும் காலமுமாகும். சதீசும், அவரைப் போன்றவர்களும் இதற்கான வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண் டும். பயிலும் முறைமை யிலிருந்தே மாற்றங்கள் நிகழும். எதிர்ப்புணர்வு என்பது கூட நீதியின் பாற்பட்ட ஒன்றுதான். நீதியுணர்வுடன் கூடிய எதிர்ப்பின் வடிவமாக சிறைக் குறிப் புக்கள் வருவது அவசியம். அவையே சிறைகளை உண் மையில் தகர்க்கின்றன. விடுதலைக்கான வாசல் களைத் திறக்கின்றன.

**கருணாகரன்**
(பத்திரிகையாளர்)
2016.08.03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நெஞ்சறையிலிருந்து

வந்தனங்கள் உறவுகளே! வாசலிலேயே உங்களை வரவேற்று அகத்துள் அழைக்கின்றேன். வளம் மிக்க வட மண்ணின் கிளிநொச்சி ஊரில் எளிமையும், புலமையும் சேர் சுவாமி விவேகானந்தர் பெயரில் அமைந்த விவேகானந்த நகரை வாழ்விடம் என்பதில் நான் வளப்பமடைகிறேன். சிறுபான்மை வரலாற்றின் காலச் சக்கரம் சிரையேக வைத்து விட்டதால் நிகழ்காலம் எனக்கு துர்க்கித்த நாட்களாகவே தொடர்கின்றது. கொடுக்குகள் முறிக்கப்பட்ட நண்டுகளாய் வாழ்வின் சத்தான காலத்தை சிறையறைக்குள் சிதைத்துக் கொண்டிருக்கையில் எனது பேனா மையை பருகிவிட்டு எழுத்துக்களாய் அழுகிறது. அதன் வலியில் இந்த "விடியலை தேடும் இரவுகள்...." கவிதை நூல் என் இரண்டாவது இலக்கிய தரிப்பிடமாய் அமைகிறது.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உருவாகிய தமிழ் தேசிய இனம், ஆதி முதல் வலிகளால் ஆசீர்வதிக்கப்பட்டு இன்று வரை நிம்மதியான வாழ்வுக்காக எதிர் நீச்சல் அடித்துக் கொண்டிருக்கிறது. எவ்வாறாயினும் "முறன் மிக்க சமூகங்களுக்கு இடையில் கருத்துப் போரை நிகழ்த்த கலை எப்போதும் ஒரு கருவியாகவே செயற்படுகிறது" என மார்க்கஸியம் கூறுகின்றது. அதற்கேற்ப இருண்டு கிடக்கும் நம் தேசத்துக்கு ஒளி வெள்ளம் பாச்சும் வலிமை நூல்களுக்கே அதிகமாக உள்ளது எனக் கொள்ள முடியும்.

போர் மேகம் சூழ்ந்திருந்த காலத்தில் படைப்பு ஊக்கம் கொண்ட சில எழுத்தாளர்கள் தமது பேனாவை சவக் குழிகளுக்குள் தள்ள வைக்கப்பட்டனர் என்பது ஒரு கசப்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை. ஆயினும் கருத்து சுதந்திரத்துக்கான எனது ஆதரவு கட்டுப்பாடற்றது. அது நான் ஏற்காவிட்டாலும் கூட. எழுத்துக்களின் வழி பிறக்கும் சொற்கள் ஒரு செய்தியின், ஒரு உண்மையின், ஒரு வரலாற்றின், ஒரு இலக்கியத்தின் பதிவாகி என்றும் நீடித்து நிலைத்து நின்று எக்காலத்திலும் அழியாத பொருளாகி விடுகிறது. அதற்கமைய எண்ணற்ற இலக்கியத்தில் ஊறித்திளைத்திட முடியாத சூழலில் அரிதிலும் அரிதாக கையில் கிடைக்கும் ஒரு சிலவற்றை கனம் பண்ணி சிலாகித்து என் சிற்றறிவுக்கு எட்டியவாறு அடக்கு முறை அக்கினியில் அவித்தெடுக்கப்பட்ட எனது சமுதாயத்தின் துன்ப துயரங்களையும் கிள்ளியெடுத்து வாசகர் தம் கட்புலனில் அனுபவிக்க கவிதை புள்ளியிட்டுள்ளேன். இத்தோடு சில மனங்களையேனும் தொட்டு மாற்றங்களை விளைவிக்க ஆவல் கொள்கின்றேன்.

தோற்றுப் போன இனமொன்றின் கடைக்கீழ் பிரதி நிதிகளாக எம்மை நோக்கும் அதிகாரப் பீடம் சிறையில் எமக்குப் புரட்சி எழுத்துக்களை புசிப்பதற்கு கண் விலங்கிட்டுள்ளது. எப்போதும் இலங்கை தேசத்தில் நியாயத்தின் விலை அதிகம் சிறுபான்மைக்கென்பது தெரிந்தும் வாங்க முயல்கின்றோம். இது எமது முயற்சியின் எடுத்துக் காட்டு. சிறை என் வாழ்வில் ஆயுள் அரசியல் கைதியெனும் முன்னொட்டையிட்டு ஒன்பது வருடங்களை எடுத்துக் கொண்டு, அன்னநடை பயில்கின்றது. இந் நாட்களில் நான் உணர்ந்து அனுபவித்த பொல்லாத் துன்பங்களுக்கிடையேயும் இம் மண்ணில் இன்னும் நான் செய்யவேண்டிய சமூக நற்பணி ஏராளம் உள்ளது என்ற பொறுப்பும் என்னை உயிராக நேசிக்கும் மூன்று பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவிகளின் ஆதரவும் என்னை நிமிர்த்தி வைத்துள்ளது எனலாம்.

"ஒருவனுடைய முழுமையான நிலைப்பாட்டை அறிவ தற்கு சிறை நல்லதொரு தருணத்தை வழங்கும். தீயதை அகற்றி நல்லதை விருத்தி செய்யலாம்" என சிறையில் இருந்து மனைவிக்கு நெல்சன் மண்டேலா எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அது போல உறவுகள், நட்புகள், சொந்த பந்தங்கள் யார் என்பதை எனக்கும் தெரிய வைத்தது நீண்ட நெடுஞ்சிறை வாழ்வு.

நெஞ்சத்தில் இருந்து பிறப்பெடுத்து மன உணர்வின் ஆழத்தில் ஒளிவிட்டு கிளர்ந்தெழும் மொழிகளை மற்றவர் செவி தாண்டி உளம் சேர வைப்பதும், காலம் மாறிப் போனாலும் தமிழ் தேசமாந்தரின் சுவடுகளை பதிவு செய்வதும் எனது கனதி கொண்ட எதிர்பார்ப்பாகும். நான் நடமாடும் நாட்களில் என் சமூகத்திற்கொரு ஒற்றையடிப் பாதையேனும் காட்டியாக வேண்டுமென்று முயற்சிக்கின் றேன். சிறை எனக்கு நியாயமான சமூக பட்டறிவை உண்டு பண்ணி இருந்தாலும் அது என்னை செதுக்கியது எதுவாக? என்பது என் முயற்சிக்கு முத்தம் தர வேண்டிய வாசகர்களே தீர்மானிக்க வேண்டும்.

முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான இன்றைய சூழல் எமது விடலைகளை சோம பானங்களால் முடிச்சுப் போட்டு சிக்க வைத்துள்ளதை, சிலர் சுதந்திரத்தின் ஓர் அங்கமென சுவைத்து மகிழ்கின்றனர். இவ்வாறானவர்களுக்கு மத்தியில் வலுவுள்ள வாழுமினத்தின் முதிரா யௌவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணர்கள் அனுபவ இலக்கியம் படைப்பதில் ஆர்வம் காட்டுவது ஆனந்தமடைய வைக்கிறது. ஒரு படைப்பு பல தரிசனங்களாக, பல பிரதிகளாக, பல்வேறு படைப்புக்களாக மாறும். இவ் அதிசயத்தை அரங்கேற்றுபவர்கள் வாசக பொது மக்களே. தமிழோடு தமிழ் இனத்தையும், அவர்களின் கண்ணீரையும் தனதாக்கி அவற்றை கருவில் ஏற்றி ஆவணமாக வெளியிட்டு வரும் ஆழமானதும், அகலமானதுமான மனது படைத்தவர்களை எனது நினைவு பேழையில் பாதுகாக்கின்றேன்.

மாங்கனி போன்ற இலங்கைத் திருநாட்டில் முரண் பாடுகளுக்கு முற்றுப் புள்ளியிட்டு, புரையோடிப் போயுள்ள நல்லிணக்கத்திற்கு உயிரூட்ட ஒன்றுபடும் ஒற்றுமைக் கரங்களுள் எனது கரமும் ஒன்றென இச் சந்தர்ப்பத்தில் பொறுப்புடன் பதிவு செய்கின்றேன். எனது விருப்பங் களுக்கும், முயற்சிகளுக்கும் எப்போதும் பச்சைக் கொடியசைத்து பக்கத்து இருக்கைப் பயணியாக இருந்து வரும் அன்பு அம்மா மகேஸ்வரி, ஆசைத் துணைவி சியாமளா, பாசமகள் காவியா(கம்ஷா) ஆகியோரை நெஞ்சத்துள் நிறைத்துக் கொள்கின்றேன்.

நிறைவாக, இச்சிறியவனின் நூலுக்கு அணிந்துரை நல்கி வலிமை சேர்த்திருக்கும் பத்திரிகையாளரான திரு. கருணாகரன் அவர்களுக்கும் நேச மொழியில் நெகிழ்வுடன் வாழ்த்துக்களை வழங்கிய நெஞ்சங்களுக்கும் நன்றியின் அட்சரங்கள் உரித்தாகட்டும். என் எண்ணக் கவிகளின் முதலாம் பதிப்பு அச்சேற நிதி உதவி செய்த "படைப்பாளிகள் உலகம்" அமைப்பிற்கும், இந்த இரண்டாம் பதிப்பிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏணியாக இருந்த ஏற்றமிகு நண்பர்களுக்கும் மகிழ்வுடன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு முகம் தெரியாத எனது படைப்புக்களுக்கு முகவரி தந்த பத்திரிகைகள், பருவஏடுகள் மற்றும் பல்சுவை இதழ்களுக்கும் அவ்வப்போது எனக்கு ஆலோசனை தந்துதவிய தமிழ் பேசும் இலக்கிய உள்ளங்களுக்கும், ஊடக நண்பர்களுக்கும் பண்பகலா நன்றியினை பகிர்ந்து கொள்கின்றேன். மேலும் இந்நூலை அச்சிட்டு வெளியிட அனைத்து வழிகளிலும் அனுசரணை வழங்கிய சர்வ தரப்பினருக்கும் என் சிரம் தாழ்ந்த நன்றிகள் சொந்தமாகின்றது.

இனி கவிதைகள் உங்கள் கையிருப்பில். எழுத்தாளனாக எழுந்து நடக்கத் துடிக்கும் குழந்தை என்ற வகையில் வாசக நெஞ்சங்களின் கருத்துக்களையும் விமர்சனங்களையும் விரும்பிக் கையேற்கின்றேன்.

நன்றி

**விவேகானந்தனூர் சதீஸ்**
கிளிநொச்சி. 2016.09.05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகா உன்னிடம்

விவேகானந்தனூர் விநாயகனே
வினையகற்றும் மூத்தவனே
வேண்டும் வரம் தருபவனே
வேட்கை தணிவிப்பவனே!

ஆறுமுகன் அண்ணனே
ஆனைமுகப் பெருமானே
வேங்கைகள் களமாடிட
வெற்றியருள் புரிந்தவனே!

வேதங்கள் ஓதியோரும்
வேள்விகள் செய்தோரும்
முள்ளிவாய்க்கால் முற்றத்திலே
மரணத்தை அணைத்தனரே!

பாதங்கள் பணிந்தோரும்
பாற் பொங்கல் படைத்தோரும்
பேதமின்றி மீதமின்றி
போரினிலே மாண்டனரே!

வன்னி நிலம் உந்தனுக்கு
வரவேதும் வைத்ததுவா?
வாழ வந்த மாந்தர்களை
விதையாக்கி விடலாமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகுதியான ஆத்மாவெல்லாம்
பரம பதமடைந்திட
ஐந்து கரத்தோனே அருளிடுவாய்
அபலைகள் நாம் வேண்டுகிறோம்!

கவி புனையும் எந்தனுக்கு
கைவிலங்கை அகற்றிடையா
"விடியலைத் தேடும் இரவுகள்..." நூலை
வெற்றியோடு படைத்திடையா!

## அந்த நாள்

நேற்றுப் பொழிந்த மழையில்
முதல் முதல்
முழுசாய் நனைந்த என்னை
உலர்த்திக் கொண்டிருக்கிறது
இரும்புச் சிறை!

மீண்டுமொரு மழையால்
எப்போது என்னை முழு
ஈரமாக்குவாய் ...... ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சி எழில்

நெற்கதிர் அசையும் அழகினிலே
நெற்றி வியர்வைத் துளியினிலே
கரைச்சி எழில் பொழிகிறது
கந்தன் முகம் தெரிகிறது!

கனகாம்பிகைக் கருணையுண்டு
கிருஷ்ணரின் கடாட்சமுண்டு
கிளி. நகரின் பெருமை கண்டு
குல மாந்தர் குதூகலிப்பார்!

சீரிய செந்தமிழ் வளர்த்து
சிறப்புடன் நற்கல்வி நல்கும்
நேரிய கல்லூரிகள் மூன்றும்
நகர்ப்புற பள்ளிகள் பாரும்!

நிழல் தமிழ் அரசொன்றின்
நிகர் தலைநகராய் அன்று
ஐ.நா. வரையும் சென்று
அகிலத்தில் நிமிர்ந்த ஊராம்!

கலையுடன் பண்பாடு தனை
கட்டிக் காத்த சிற்றூர்
கலாசார விழுமியங்கள்
போற்றிப் புகழ்ந்த நகரம்!

(கரை எழில் சஞ்சிகை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவலத்தின் பறை

அரசியல் கைதிகளின்
விடுதலைக்கு
அரசியல் கட்சிகளின்
ஆர்ப்பாட்டமும் அமைதிப் பேரணியும்
அர்த்தமற்றதாகி விட்டது!

அகிம்சை வழியும்
உண்ணா நோன்பும்
அதிகாரிகளையோ அரசாங்கத்தையோ
தீண்டியதாய் தெரியவில்லை!

லிப்டன் சுற்றுவட்டம்
கோட்டை ரயில் நிலையம்
மகசின் சிறைவாயில் என
பதாகையுடன் படையெடுத்த
பலரையும் காணவில்லை!

ஆர்ப்பாட்டம் செல்லும்
அரசியல் கைதி வீட்டில்
அடுப்பு எரிவதில்லை அன்று
அடுத்த வேளை சோற்றுக்கு
அல்லற்படும் இவர்களை
அகிலம் காணவில்லை
ஐ.நா.வும் நோக்கவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் இருந்தும் குருடராய்
காது இருந்தும் செவிடராய்
சாட்டுப் போக்கு காட்டும்
அரச தலைவர்கள்!

புலத்திலிருந்து
புத்துயிர் அளிக்கும்
எம் உறவுகளே ......
எங்கள் கண்ணீரைத் துடைக்க
யாருமில்லையா?

(சுடர் ஒளி 15.12.2013)

## உடைந்த வளையல்கள்

அன்பானவளே!
அன்று உன் வளையல்களை
உடைத்த போது
புரியவில்லை எனக்கு உன்
வலிகளும் வேதனைகளும்!

உடைத்தான் மாப்பிள்ளை
மகளின் வளையல்தனை
உள்ளம் வலிக்கிறது
உதிரம் கொதிக்கிறது
இன்று எனக்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடும் நாமும்

"ராசைய்யா"
"ரம்பண்டா"
"ரகுமானும்"
அயல் நாடு போகையில்
அன்பு நண்பர்கள்....
இலங்கையர் நாமென்ற
இனிய உறவொன்றே
இணைக்கிறது இவர்களை!

"கிளிநொச்சியும்"
"காலியும்"
"காத்தான் குடியும்"
அருகருகாய் தெரிகிறது
அண்டை நாட்டில்
அறிமுகமாகையில்!

ஆனால்
இனம், மதம், மொழியென்று
மல்லுக்கட்டுகிறீர்கள்....
எல்லைச் சண்டையில்
கொல்லத் துடிக்கிறீர்கள்....

சாதிக் கலப்பென்றும்
சான்றோர் நாமென்றும்
சாகத் துடிக்கின்றீர்கள்
சொந்த நாட்டில்!

(தினகரன் - 01.12.2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் வரிகள்

அன்பு மகளுக்கு
அப்பாவின்
முத்தான முதல் வரிகள்
சொல்லெறிகள்
சோகங்கள் கலைந்து நீ
பதறாமல் சிதறாமல்
திட்டங்களை தீட்டுஅதை
செயல்களில் காட்டு!

ஐம்பொறி திறந்து
அகிலம் போற்ற
உத்வேக எண்ணங்கொண்டு
ஊக்கமாய் எதையும் வென்று
அன்னையவள் கண்ணீரை
அகற்றிடு என் மகளே!

கருத்தில் உள்ளதெல்லாம்
கட்டாயம் நிறைவேறும்
கிளிநொச்சிக் கந்தன்
கிருபை அருளினால்
தளர்ச்சி என்பது இல்லை உனக்கு
மகளே உன்
வளர்ச்சிக்கு வானமே எல்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு மண்ணின்
மங்காப் புகழை
தொட்டுப் பிறந்த தூயவள் நீ
அமரர் செல்லையாவின்
அன்புள்ள பேத்தியெல்லோ!

ஜெயித்திடு சிறுத்தையாய்
ஜொலித்திடு சிற்பமாய்
தடுப்புக் - காவலில்
தந்தை உன் நினைவினில்
தெளிந்திடும் கவிதைத் துளிகள்!

**(அன்பு மகளுக்கு ஒரு தந்தையாய்)**

03.05.2012

# தெரியாது

காவி படிந்த
காவலறைக்குள்
மூன்று சுவரிலும்
முந்நூறு தமிழ்ப் பெயர்கள்
இருக்கிறார்களா .......?
இல்லாமலாக்கப்பட்டார்களா...?
சத்தியமாய்
எனக்குத் தெரியாது ....
இருக்கிறேன் இன்றும்
இரும்புச் சிறைக்குள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைக்கவில்லை

ஓடி வரும் நதியை
கவி வடித்தேன்
நிலைக்கவில்லை
ஆடி வரும் அலைகடலை
கவி வடித்தேன்
நிலைக்கவில்லை

முத்தமிடும் என் கனவை
கவி வடித்தேன்
நிலைக்கவில்லை
பூத்துக் குலுங்கும் பொன்மலர்களை
கவி வடித்தேன்
நிலைக்கவில்லை

நேற்றிருந்த சமாதானத்தை
கவி வடித்தேன் - அதுகூட
நிலைக்கவில்லை

(தினக்குரல், தினகரன்)

10.11.2008

# தண்டனை

குற்றமிழைக்காமலும்
சந்தேகிக்கப் படாமலும்
ஆயுள் தண்டனை
அனுபவிப்பவர்
சிறைக் காவலர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலர் தினம்

கரைதொடும் அலைகளாய்
அன்பால் அடிக்கடி என்னைத் தொட்ட
என்னவளே உன்
நினைவுகளுடன்
தொட்டுச் சென்ற அலையின்
தொடுகை சுமந்தபடி
கற்பனையில் ....

எட்டாவதாண்டு காதலர்தினமும்
அடைக்கப்பட்ட கூண்டினுள்
அகப்பட்டுக் கொண்டது
ஒன்பதாவது ஆண்டிலேனும்
எமக்கொரு வழி பிறக்குமா
இறைவா சொல்லுபதில்!

(மித்திரன் - 01.09.2013)

# காதலாம்

அன்றொருநாள் அவனைப் பார்த்தாள் .....
அதரம் விரித்துப் புன்னகைத்தாள் ............
அதற் கடுத்து அவனின் நாமம் கேட்டாள் .....
அப்படியே அவனிருக்கும் ஊரைக் கேட்டாள் ...
அன்றிலிருந்து அவனுக்கே அடிமையானாள்....
அன்னையையும் தந்தையையும் முற்றாய் துறந்தாள்
அவனிடமே சென்று தன்மானங்கெட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திப்பு

அன்னையோ, தந்தையோ
மனைவியோ, பிள்ளையோ
அடுத்த பக்கத்தில்
மூன்றரையடி இடைவெளியில்
கம்பியினாலான
கறுத்த இரண்டு நெற்றுகள்
எம்மையும் அவர்களையும்
இருவேறாகப் பிரித்து "சந்திப்பு"!
காக்கிகள் அருகில் என்றால்
கதையில் கச்சிதம்
கண்கள் மட்டுமே பேசி
கண்ணீரை உதிர்க்கும்!
பத்து நிமிடத்தையும் விழுங்கிய
பாழாய்ப் போன மணிக்கூடு
பச்சைத்துரோகியாகிறது!
பெற்ற பிஞ்சைக் கூட
தொட்டுப் பார்க்க முடியாமல்
இந்தமாதச் சந்திப்பும்
முடிந்துபோகிறது!
அடுத்த மூன்றுமாதம் வரை
அதே நினைவில்
அவர்களும் நாங்களும்!

(சிறையறைச் சந்திப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரரே

திறவுங்கள் ....
அறிவுக் கண்களையும்
ஆய்வு நோக்கையும்
உணருங்கள் ...
உங்கள் நிலையினையும்
பண்பாட்டுப் பாலத்தையும்
மதியுங்கள் ....
பெற்றோர் கருத்தையும்
பெரியோர் மொழிகளையும்
கட்டுப் போடுங்கள்....
காதலென்று தடுமாறும்
உங்களுணர்வுகளுக்கும்
கலாச்சாரத்தைத் தின்னும்
கண்கெட்ட எண்ணங்களுக்கும்
எறியுங்கள் ....
காதல்பேசிகளையும்
காதுக் கடுக்கண்களையும்
மறையுங்கள் ....
ஊதாரி எனும் நாமத்தையும்
காவாலி எனும் பட்டத்தையும்
தடுத்திடுங்கள் ....
முகமறியாத் தொடர்புகளையும்
அர்த்தமில்லா நட்புக்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகர்த்தெறியுங்கள் .....
கயவர் காவாலிகளையும்
காமவெறியர்களையும்
மறந்திடுங்கள் ......
கொச்சை வார்த்தைகளையும்
இச்சை இனவாதங்களையும்
ஒதுக்கிடுங்கள்....
வெட்டிப்பேச்சுக்களையும்
வேடம் போடுவதனையும்
கைவிடுங்கள் ....
போதையேற்றுவதையும்
பாதையில் தள்ளாடுவதையும்
விலக்கிடுங்கள் .....
நாளுக்கொரு பெண்ணையும்
வீதிக்கொரு விடுதியையும்
அழியுங்கள் ...
மனித சாயலில் விலங்குகளையும்
மன்மத கழுகுகளையும்
சுதந்திரம் என்பது இதுவல்ல
சகோதரரே...
தன்மானம் காத்து
தன் இன மானங்காப்பதே
தகைமையான சுதந்திரம்!

(மட்டு சீ.மூ.இராசமாணிக்கம்
நினைவு மலருக்கு எழுதியது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபகரிப்பு

கடற்படைக்கு
தேவையெனச் சொல்லி
கைப்பற்றினர் எம் காணிகளை

படைப்பயிற்சி
முகாமெனச் சொல்லி அங்கு
பலமாகக் கட்டினர்
நிரந்தரக் கட்டிடங்களை

பலாலித் தளத்துக்கெனச் சொல்லி
பல வீடுகளை
பலவந்தமாக இடித்தனர் - இறுதியில்
படைகள் பயிர் பண்ணை செய்து
அடிவிலையில் அதனை விற்று
அடித்தனர் விவசாயிகள் வயிற்றினில்!

பனைகளை அழித்து
பதுங்குகுழி அமைக்கின்றனர்
வனவளம் சிதைத்து
சூழலை சூறையாடுகின்றனர்

மின் நிலையம் அமைத்து
மாசுபடுத்துகின்றனர் நிலத்தடி நீரினை
மனிதவாழ் வளங்களை
மலினமாய் எண்ணி
மரணிக்கச் செய்கின்றனர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் நிலத்தில் கத்திப்புரண்டு அழும்
தாயின் கண் முன்னே
கையகப்படுத்துகிறார்கள் - அவர்தம்
பரம்பரை முதுசங்களை

எல்லாவற்றுக்கும்
தேசியப் பாதுகாப்பென
தெவிட்டாமல் சொல்கிறார்கள்!

## மூஎளி

உங்களின் துடிப்பு
உங்களின் தடுப்பு
உங்களின் பிடிப்பு
ஒவ்வொன்றும் பார்த்து
ஆடமுடியாது
மூடியிருக்கும் நாங்கள்
கைகளைத் தட்டினோம்!

திறந்த வெளியில் மட்டுமே
துடுப்பெடுத்தாடும் உங்களுக்கு
வடக்குக் கிழக்குத் தமிழனின்
துயரவாழ்க்கை தெரிவதற்கு
நியாயமில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதிர்கன்னி

காசுபணம் வேண்டும்
இல்லை
சொத்து சுகம் வேண்டும்
இல்லை
பட்டம் பதவி வேண்டும்
இல்லை
கொள்ளை அழகு வேண்டும்
இவையெதுவும் இல்லாததால்
இன்று நான் முதிர்கன்னி!

(தினகரன்)

# சொந்தம்

கொழும்பூர் மச்சானுக்கு
இந்த
ஏழை மச்சி வீடு வர
இத்தனை காலமாச்சா
இப்பமட்டும் என்னவாச்சாம்?

செட்டிக்குளத்து முகாமுக்குள்ள
சீரழிந்து தவிக்கையில
சல்லிக்காசு தரா
செவத்த கொழும்பு மச்சான் - நான்
பாடுபட்டு டாக்டரான
சேதி கேட்டு இப்பமட்டும்
சொந்தம் சொல்லி வந்து நின்றா
எந்தப் பொண்ணும் நம்புவாளா?

(தினகரன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழனாய் வாழ்வேன்

கைது செய்த போதும்
தமிழ்க் கைதியான போதும்
தடுப்புக் காவலின் போதும்
சித்திரவதையின் போதும்
சிறை சென்ற போதும்
தண்டனை பெற்ற போதும்
தர்மம் அழிந்தபோதும்
தவிப்புக்கள் வந்தபோதும்
தமிழை மறவேன்
தமிழுக்கு தமிழனாய் வாழ்வேன்!

# பணம்

பணம் காசு சேர்க்க வேணும்
பெரிய வீடு கட்ட வேணும்
நகை நட்டு போட வேணும்
மச்சான் நீங்க
வெளிநாடு போக வேணும்!

நாடு கெட்டுக் கிடக்குதடி
நானின்றி நீ இங்கு
நல்ல பெயர் கேட்காயடி
ஊருக்குள்ள உழச்சு நாம
உத்தமராய் வாழ்வோமடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்கொல்லி

அழகிய
இலங்கைத் திருநாட்டில்
ஆட்கொல்லி எயிட்சை
அழித்திடுவோம் - நாம்
ஒன்று கூடி
இனமத பேதமற்று
எம் இனிய தாய்நாட்டில்
ஒழித்திடுவோம் எயிட்சை
காத்திடுவோம் சமூகத்தை!

ஒருவனுக்கு ஒருத்தியென்று
ஓங்கி ஒலிக்கச் செய்து
ஓரினச் சேர்க்கையினரை
பாலின மோகத்தினரை
போதுமான போதனையூட்டி
பேணிப் பாதுகாப்போம்!

வேண்டாத உறவு பற்றி
விழிப்புணர்வை பகிர்ந்தளித்து
பொறுப்புடன் செயற்பட்டு
எச். ஐ.வி. என்பது
ஏனிங்கு உள்ளதென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் வியக்கும் வண்ணம்
உயர்த்திடுவோம் நம் நாட்டை
ஒன்றுபடுங்கள் சகோதரரே

(14.08.2016 மகசின் சிறையில்
எச்.ஐ.வி, பற்றிய விழிப்புணர்வு
செயலமர்வு நிறைவின் போது)

## பூப்படைந்து

மச்சினியே மச்சாளே – தாய்
மாமனிடம் சொல்லிடடி
பொன்னிறக் கன்னி யொன்று
பூப்படைந்து போச்சுதென்று!
குச்சிகட்டி குளிப்பாட்டி
கச்சிதமா சடங்கு பண்ண
சோசியரப் பார்த்து - நல்ல
சேதி ஒண்ணு சொல்லுறேன்டி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடிவம்

மரணத்தின்
மறு வடிவம்
நித்திரை!

வாழ்வின்
நிழல் வடிவம்
சினிமா!

ஈர்ப்பின்
இன்னோர் வடிவம்
காதல்!

புரிந்துணர்வின்
பொய் வடிவம்
போராட்டம்!

அறிவின்
கரு வடிவம்
கல்வி!

இணைப்பின்
பகை வடிவம்
பிரிவு!

ஒற்றுமையின்
முரண் வடிவம்
வேற்றுமை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திப்புக்கள்

முதலாம் சந்திப்பில் - அவள்
முகவரி தேடினேன்
இரண்டாம் சந்திப்பில் - அவள்
இருப்பிடம் நாடினேன்
மூன்றாம் சந்திப்பில் - அவள்
முத்தம் பரிமாறினேன்
நான்காம் சந்திப்பில் - நான்
என்னை மறந்தேன்
ஐந்தாம் சந்திப்பில் - நான்
அவளிடம் சரணடைந்தேன்
ஆறாம் சந்திப்பில் - நான்
அனைத்தையும் இழந்தேன்
ஏழாம் சந்திப்பில் - நான்
ஏழ்மையாய் ஆனேன்
எட்டாம் சந்திப்பில் - நான்
கெட்டவனாய் போனேன்
ஒன்பதாம் சந்திப்பில் - அவள்
இன்னொருவன் இன்பக்களிப்பில்
பத்தாம் சந்திப்பில் - மூவரும்
எச்.ஐ.வி விடுதியில்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க(ற)னவா?

எனது ஊரின்
கிரவல் பாதையும் - நான்
ஓடித் திரிந்த ஒழுங்கைகளும்
இன்றுகளில் சென்று
காண முடியுமா?
கம்பிக் கூடுகளையும்
கை விலங்குகளையுமே
பார்த்துப் பார்த்துப் பழகிவிட்ட என்
கண்களுக்கு
இப்போது ரம்மியமான காட்சிகள்
தோன்றாததால் - கண்கள்
பிரகாசமற்றுப் போய்விட்டன!
தெரியாத பாசைகளையும்
தகாத வார்த்தைகளையும்
கேட்டுப்பழகிப் போன என்
செவிகளுக்கு - இப்போது
இறைகீதங்களையும் மரண ஓலங்களையும்
பாகுபடுத்த முடியாத ஒரு
பரிதாப நிலை!
எது எப்படியோ
ஊருக்குள்ள இப்போது
நல்லிணக்கம் அபிவிருத்தி என்கிறார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்து கொண்டு இருப்பதெல்லாம்
நனவுதானா? என்று
நம்ப முடியவில்லையே
சந்தேகமற்ற சமாதானமொன்றால்
சத்தியமாய் எனக்கும் கூட
சந்தோசம் தான்

(உதயன் 25.12.2015)

# விருப்பு

விடுப்பில்லாத வேலையிது
வீட்டுக்குப் போவதென்றால்
மாசத்தில் ஒரு தடவை
மட்டான மூன்று நாள்!

சங்கடங்கள் தீர்க்கவென்று
சனியிரவு மனையேக
மனைவியவள் வாய் திறந்து
மாதவிடாய் என்று சொன்னாள்.

(மித்திரன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரிய வாழ்வுக்கு

அன்னையும் பிதாவையும்
அனுதினமும் வணங்கிடுவோம்
ஆலய தரிசனம்
அவசியம் செய்திடுவோம்
அறிவு சார்விடயங்கள்
தெரிந்து தெளிந்திடுவோம்
தூய எண்ணங்களை
அகத்தினில் ஏற்றிடுவோம்
கல்வியோடு ஒழுக்கம்
கருத்தினில் இருத்திடுவோம்
கலாசாரம் பண்பாடு
கண்ணியமாய்ப் பேணிடுவோம்
கலையும் எழுத்தும்
கண்ணெனக் கொள்வோம்
கருணைப் பண்பை தினம்
கடைப்பிடிப்போம்
இனமத பேதம் இல்லாதொழிப்போம்
உண்மை நேர்மை உணர்ந்திடச்செய்வோம்
ஊர் உலகு போற்றிட
வாழ்ந்து காட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடியாத ஏக்கங்கள்

இரும்புக் கூண்டுகளோடு
இரண்டறக் கலந்து விட்ட
இன்னல்கள் நீண்ட இரவுகள்
பொழுதின் புலர்வுக்காய்
காத்திருக்கின்றது!

உறக்கமற்ற விழிகள்
ஒவ்வொரு இரவும்
விடியலை நோக்கிக் காத்திருக்கிறது!
அமைதியை அஸ்தமித்து
தெருநாயொன்று ஊளையிடும் ஓசை
எட்டுத்திக்கும் பரவுகிறது!

துன்பத்திற்கான துயரச் சமிக்கையோ
உருப்படியாகா உயிரச்சம்
உதறல் எடுக்கிறது
காலை விடிந்தால் எல்லாம்
கபாலத்துள் சிக்கிக்கொள்கிறது!

மௌனமொழி
மகுடம் சூடிக் கொள்கிறது
எனது இதயமும் அதற்கு
இசைந்து கொடுக்கிறது!
தொடரும் தடுப்புக்காவலில்
துலங்காத விடியல்
முடியாத ஏக்கங்களாய்
முகையவிழ்க்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியம்

காதலித்த மங்கையுன்னை
கைவிடுவேன் என்றெண்ணி
கவலை நீ கொள்ளாதே
இது நம்மூர்
கந்தன் மேல் ஆணை
சத்தியத்தை மீறுவேனானால் ஏ-9
சாலையிலே நிச்சயம் சாவு வரும்!

(மெட்ரோ நியூஸ்)

# தூக்கம்

மருத்துவர் தூங்கினால்
நோயாளிக்கு மரணம்
நீதிபதி தூங்கினால்
கைதிக்குத் தண்டனை
சாரதி தூங்கினால்
பயணிக்கு விபத்து
ஆசிரியர் தூங்கினால்
மாணவர்க்கில்லை சித்தி
கணவர் தூங்கினால்
கெட்டுவிடும் குடும்ப வாழ்வு
நாட்டுத் தலைவன் தூங்கினால்
நடுத்தெருவில் குடிமக்கள்!

(உதயன் - 25.12.2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுபடுவோம்

இனங்கள் இணைந்து
மனங்கள் மகிழ
இம்சைகள் ஒழிந்து
இன்பங்கள் பொங்கிட
அன்பு பெருகி ஆணவமழிந்திட
ஒன்றுபடுவோம்!

உறவுகள் மகிழ்ந்து
ஊழ்வினையகன்றிட
ஐயம் போக்கி
ஈகை உயர்ந்திட
எமக்குள் வேண்டாம்
ஏற்றத்தாழ்வு!

ஓர் நாடென்று
ஓர் அணி நின்று
ஒன்றுபடுவோம்
ஒற்றுமையாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மூர்ப் பனைகள்

ஓங்கி உயர்ந்து
ஊருக்கு பயனளித்த எம்
பனந்தோப்பினை
கூடி வளர்த்தோம் நாம்
கொடிகட்டிப் பறந்தோம்
கூழோ கஞ்சியோ
குடித்து மகிழ்ந்தோம்
தோப்பு நிழலில்!

பனையின்றி நாமில்லை
நாமின்றி பனையில்லை
என்ற பக்குவம்
பாலர் முதல் பாட்டிவரை
பலமாய் பதிந்தது!
உடல்பொருள் ஆவிதனை
ஊரவர்க்காய் உரமாக்கி - மேலும்
வடலிகளை மெய்ப்பித்தது!

எங்கிருந்தோ வந்த
இரக்கமற்ற பேரலைகள்
பெயர்த்தழித்தன எம் பனந்தோப்பை!
நிழலின்றி நிர்க்கதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் தேச மாந்தர்

நடைப்பிணமாய் சரணடைந்தார்

பற்றைக் காட்டுக்குள்!

நிச்சயமாய் நம் பனைகள்

நிர்மூல மாகையில்

விதைத்திருக்கும் பல விதைகளை

நிரந்தர நிழலுக்காய்

நம்பிக்கையுடன் காத்திருப்போம்!

## கவிதாயினி

சிறுவர் கவி வடித்தாள்

சிறுமியாய்

இளமைக் கவி வடித்தாள்

குமரியாய்

பாசறைக் கவி வடித்தாள்

போராளியாய்

காதல் கவி வடித்தாள்

காதலியாய்

திருமணக் கவி வடித்தாள்

மனைவியாய்

இரங்கல் கவி வடித்தாள்

விதவையாய்

அவள் விதையாகி கவி வடிக்க

வெற்றிடமானாள் (சுடர் ஒளி 18.04.2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்தின்ற கொஸ்லந்தை

ஐப்பசி இருபத்தொன்பது
அதிகாலை அமைதியாய் விடிந்தாலும்
கண் விழித்த கதிரவன்
கண்ணீரைத் தருவானென்று
கனவிலும் எண்ணாத கணமது!

இடிவிழும் போரோசையுடன்
இராட்சத மண் திட்டுக்கள்
எழில்கொஞ்சும் தேயிலை வனத்தை
ஏழைகளின் வாழ்விடத்தை
அகங்காரத் திமிருடன்
ஏப்பமிட்டுத் தீர்த்தன!

மீரியபெத்த தோட்டமது
மீதியின்றி மூழ்கியது
மனித ஓலங்கள் - மண்ணில்
மாண்டு புதைந்தது
கொஸ்லந்தை மண்ணிலொரு
கோரத் தாண்டவம்

இயற்கையின் வெறியாட்டத்தில்
இலங்கையிலும் ஒரு அத்திப்பட்டி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தோட்ட முதலாளிகளின்
வளர்ச்சிச்சின்னம்
அரசியல் தலைவர்களின்
வெற்றிச் சின்னம்
பொருளாதாரத்தின்
முதன்மைச்சின்னம்
கொழுந்துபறிக்கும்
கூடைச் சின்னம்!

ஆனாலும்
எண்ணூறுகளில் இங்கிலாந்தர்
உருப்படுத்திய லயன் அறைகள்
இன்னுமந்த மலையகத்தின்
ஏழை மாளிகைகள்!
இவைகளுமின்று மலை மண்ணில்
மாயமாய் ஆனது
திறந்தவெளி மயானமொன்று
திடீரென்று உருவானது!
கொழுந்து பறித்த கைகள்
குழிகளுள் புதைந்த கோரம்
ஆசியாவையே ஆடச்செய்தது!

மலையகத்தின் உயிர்
மலிவாய்ப் போனதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்தமான மீட்புப்பணி
அனர்த்தம் பிந்திய அரச இயந்திரம்
ஆறுதலாய் சுழல்கிறது!
மீண்டுமொரு மீரிய பெத்த
மீளுருவாகா வண்ணம்
அதிகாரம் மிக்க ஆட்சியினரே
ஆதரவாய் பாரீரோ ஆதாரம் தாரீரோ!
ஆசியாவின் ஆச்சரியத்தில்
நவீன அடிமைகளா மலையக மக்கள்!

(29.10.2014 கொஸ்லந்தை, மீரிய பெத்த தோட்ட
மண்சரிவு அனர்த்த நினைவில்)

## ஆத்தா உனக்கு

பேச்சியம்மாள் தாயே
பெருமையுள்ள நீயே
வாளெடுத்த வீணருக்கும்
கதவுடைத்த கள்வருக்கும்
கையுடைத்து காட்டம்மா!
"ஆவா"வும் "டிலு"வும் என
அடிவருடிக் குழுக்களின்
அடாவடிகள் அட்டகாசங்கள்
எல்லை மீறிப்போகுதம்மா
இது உனக்கு தெரியலையா?

(உதயன், சுடர் ஒளி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழி உள்ள பெரியோரே

விழி உள்ள பெரியோரே
விழித்திடுவீர் எமக்காக
சிறுவர்நாம் இறைஞ்சுகின்றோம்
சிரமேற்று நடந்திடுவீர்

நாளையென்பதை அறியுமுன் - எம்மை
நயவஞ்சகமாய் நசுக்காதீர்
மலரவேண்டிய மலர்களெம்மை
மொட்டுக்களாய் பறிக்காதீர்
விழியுள்ள பெரியோரே
விழித்திடுவீர் எமக்காக!

கருணைகொண்ட பிஞ்சுகளை
கசக்கிப்பிழியலாமா?
மென்மையான உள்ளங்களை
மென்று தின்னப்பார்க்கலாமா?
விழியுள்ள பெரியோரே
விழித்திடுவீர் எமக்காக!

பெற்ற உள்ளங்களே உங்கள்
பெருமைக்காய் சிறுசுகளை வதைக்காதீர்
கல்விப் போதனைகளை - எமக்கு
கசந்திட வைக்காதீர்
விழியுள்ள பெரியோரே
விழித்திடுவீர் எமக்காக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளி பயிலும் பாலகர் நாம்
பட்டினியில் வாடலாமா?
சல்லிக் காசுக்காய்
சிறுவர் தொழில் புரியலாமா?
விழியுள்ள பெரியோரே
விழித்திடுவீர் எமக்காக!

எதிர்காலத்திற்காய் ஏங்குமெம்மை
எள்ளி நகையாடாதீர்!
எதிர்பால் இனத்தினரே
எங்களையும் மதித்திடுவீர்
விழியுள்ள பெரியோரே
விழித்திடுவீர் எமக்காக!

## மார்ச் - 08

வேலையில்லா கணவனுக்கு
விடுப்பில்லாப் பட்டியல் போட்டு
காலை முதல் மாலை வரை
விதவிதமாய் வேலை சொல்லி
விரைகின்றாள் மனைவி
பெண் அடிமை பற்றிப் பேச

(மெட்ரோ நியூஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறையில் வைத்து

சிறையில் வைத்து என்னை
சித்திரவதை செய்யாதே
சிறகுமுளைத்து - இன்னும்
சரியாகப்பறக்கவில்லை!
அரசே
சிறையில் வைத்து என்னை
சித்திரவதை செய்யாதே!

நான் செய்த குற்றம்
தான் என்ன?
ஆயுட்கைதியாய்!
விடையில்லா வினாவாகவே
சிறையில் இருக்கிறேன்
தயவுகூர்ந்து என் தண்டனைக்கான
காரணத்தைச் சொல்லிவிடு
இதை எண்ணி எண்ணியே என்
மீதி வாழ்வையும் செலவு செய்கிறேன்
சிறையில் வைத்து என்னை
சித்திரவதை செய்யாதே!

(அவுஸ்திரேலிய இணையம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரும்புக்கம்பி

காக்கிச் சட்டை
என்னைத் தாண்டிச் செல்கையில்
முறைக்கிறான்
முணுமுணுக்கிறான்!

நானோ
வெள்ளை உடை தரித்து
வேள்விக்கடாயாய் சுருண்டு
கூண்டுக்குள் கிடக்கிறேன்!

இருவரையும் பிரிக்கிறது
இரும்புக்கம்பிகள் தான்!
இல்லையேல் இருவரும்
சகோதர மொழிச் சகோதரர்களே!

(தினக்குரல்- சுடர் ஒளி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்

தேவதைகளே
நாம் முத்தமிட்ட உங்கள்
கன்னங்களில்
இப்போதெல்லாம்
கண்ணீர்தான் கவி வடிக்கிறதாம்

வன்னியூரானின்
வரிகளில் இருந்து தெரிந்து கொண்டேன்....
கண்ணீரைத் துடைக்கவொரு
கருணைக் கரமிருந்தால்
அதுவும்
சுகம் தானே!

மகளுக்கு மடல் எழுதி உன்
மடியிருந்து
கண்ணீர் துடைக்கச் சொல்கிறேன்....
கலங்காதே கண்ணே
காலம் ஒருநாள் கண்திறக்கும்!

(சுடர் ஒளி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதற் ஊருக்கு

கஷ்ரப்பட்டுக் கட்டிய
கல்வீடு
கடன்பட்டு வாங்கிய
பசுமாடு
கால்களையே சுற்றி வரும்
கறுப்பு கடுவன் பூனை
காலையில் கேட்கும்
கந்தசாமி கோயில் மணி
குளுகுளுவென வளர்ந்திருந்த
குறோட்டன் செடிகள்
இவையெதுவுமில்லா
இன்றைய ஊருக்கு
இனியும் போக வேண்டுமா
நான்!

(உதயன் - சூரியகாந்தி)

# வழிகாட்டு

மனசு நெறஞ்ச என் மச்சான்
மாடு தேடி போகையில
கல்லு முள்ளு தையாம
காட்டுத்தளச்சியே நீ
காத்திடம்மா
போன மாடு வீடு வர
பாதை வழி காட்டிடம்மா!

(மித்திரன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையூட்டல்

சோறு கறி வெட்டையில்
சலுகை காட்டணும்
கேசம் வெட்டையில்
சலுகை காட்டணும்
தண்ணீர் பட்ஜெட்டில்
சலுகை காட்டணும்!

சலுகையின் வடிவம்
காசுமில்லை பணமுமில்லை
பாட்டிக்காரன் குடிக்கும்
லோக்கலும் குடுவும் - இது
இரண்டும் இல்லையெனில்
கஞ்சாவோ புகையிலையோ
காரமாகக் காட்டினால்
கவனிப்புக்கள் தாராளம்
சலுகைகள் ஏராளம்

(பொருள் விளக்கம் :- வெட்டையில் - எடுக்கையில்
லோக்கல் - சிறைபீடி
பாட்டிக்காரன் - தண்டனைக்கைதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதங்கம்

முள்ளிவாய்க் காலில்
தப்பி வந்தோம்
முன்னரங்கில் - தரம்
பிரிக்கப்பட்டோம்
இளம் புலிகளென
இனம் கண்டு
இளம் பெண்களெம்மை
இம்சித்தனர்
இப்போ நினைக்கின்றோம்
முல்லை மண்ணையே
முத்தமிட்டு மடிந்திருக்கலாமென்று!

காடுகளில் மறைந்தும்
மேடுகளில் தவழ்ந்தும்
கடலில் மிதந்தும்
கண்ணீரில் நனைந்தும்
பசி பட்டினி கிடந்தும்
பிஞ்சுகளை சுமந்து
விதியை நினைந்து
வீதியோடு ஓடிவந்தோம்!

பகட்டாக வாழ்வதற்கோ
பணம் காசு உழைப்பதற்கோ
அல்ல - எம்
குஞ்சுகளைக் காப்பதற்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குத் தமிழன்

சிறுபான்மை
பெரும்பான்மை என்று நீ
விரும்பினால்
வாழ்ந்துவிட்டுப் போகலாம்
வரலாறு எழுத முனையாதே!

என்றும் இனவாதத்தை கக்கும்
இலங்கை தேசமே
உன்னை எப்படி
என்னால் விசுவாசிக்க முடியும்?

எழுபதுகளில் பிறந்த
எனக்குக் கூட தமிழில்
இந்நாட்டு தேசிய கீதம்
இன்று வரை தெரியவில்லை
இது எனது நாடா எனப் புரியவில்லை
நானோர் வடக்குத் தமிழன்!

(வலம்புரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தா கூறு

கந்தனையும் கனகாம்பிகை யம்மனையும்
காலையும் மாலையும் தாழ் பணிந்தேன்
கவலைகள் கொஞ்சமும் தீருதில்லை
கடவுளுக்கும் எம்மைப்போல் கவலைகளா?

யுத்தங்கள் முடிந்தும் சத்தங்கள் ஓய்ந்தும்
சமாதானப்புறா சிறகடிக்க வழியில்லை
சஞ்சலத்தால் எம்மினம் மூன்றும் சலிக்கிறது
சாக்கடை அரசியல் சதிவலை காரணமா?

சாவினை தழுவிய சரித்திர பிறவிகள்
சேயாய் தந்த சாதனைத் தேசமதை
சோரம் போகா சொற்போர் யுக்தியால்
காத்து கரைசேர்ப்பாருளரோ கந்தா கூறு!

செங்குருதி சிந்தி செம்மல்களாய் ஆனதும்
வெஞ்சுவர் சிறைகளில் விலங்குடன் வாழ்வதும்
விழுப்புண்ணடைந்து வெடிதுகழ் சுமப்பதும்
வெற்றிக்காக வன்றி தமிழன் விடிவுக்காகத்தானே!

வடக்குடன் கிழக்கிலும் வசந்தம் வீசுமா?
வளமான எதிர்காலம் விரைவில் கிட்டுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்ச்சிகள் இல்லாத சுதந்திரம் மலருமா?
சுந்தரத் தமிழினம் சுகமாய் வாழுமா?

தமிழனாய் பிறந்து புண்ணியா உன்னடியில்
திடமாய் இருந்திட வரம் தந்து அருள்வாயா?
தொழுவோர்க்கு இரங்கி துணை புரிந்திடுவாயா?
தேவிகளின் நாயகா தேவாரக் கந்தா கூறு!

## அன்றும் இன்றும்

கண் விழித்து
காலில் வைத்து தாலாட்டி
ஈ எறும்பு அண்டாது
இரக்கத்தோடு உனைவளர்த்தார்கள்
அன்று
நீ சிறியவன்!

புறு புறுத்து கரகரத்து
புகுந்தவளின் புறணி கேட்டு
பெற்றவர்களை புறமொதுக்கி
முதியோர் இல்ல
முகவரி தேடுகிறாய்
இன்று
நீ பெரியவன்!

(வலம்புரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறையறை நினைவு

பளுப்பேறிய சுவர்களில்
என் எதிர்கால எண்ணங்கள்
மோதி விழுகின்றன
மீதமிருக்கும் கற்பனையும்
பாதியில் நிற்கிறது!
அது போல் - எம்
இனத்தின் சுதந்திரமும்
சூறையாடப்படுகிறது
வாளேந்திய சிங்கத்தின்
வாயிலிருந்து வடிகிறது - ஈழத்
தமிழனின் செங்குருதி!

இலங்கை ஜனநாயகத்தால்
இழுத்துக் கிழிக்கப்படுகிறது
இன ஒற்றுமை
அண்டை நாடோ ஐ.நா. வோ
அவர்களுக்கென்ன
பிராந்திய நலனும்
இராஜ தந்திரமும் தான்
பிரதானமாய்த் தெரிகிறது!

(தினக்குரல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்னாடை

இன்றுகளில்
மலிவாகக் கிடைக்கும்
மகத்தான் போர்வை!
எவருக்கும் எவரும்
எப்போதும் எப்படியும்
எளிதாக சாத்தும்
எம்மூர் பொன்னாடை!

தகுதிக்கும் சகதிக்கும்
தனித்துவம் போற்றாது
அறிவுக்கும் அழிவுக்கும்
அன்னியோன்னியம் பார்க்காது
தோளேறி துதிபாடும்
துண்டுச்சால்வை
எம்மூர் பொன்னாடை!

(தினக்குரல்)

## இன்றைய வாழ்வு

கடத்தலுக்கு அஞ்சி
கப்பல் ஏறுவதும்
மிரட்டலுக்கு அஞ்சி
மௌனமாய் இருப்பதும்
கப்பத்திற்கு அஞ்சி
கடல்கடந்து செல்வதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைக்கு அஞ்சி
தலைமறைவாய் வாழ்வதும்
கொள்ளைக்கு அஞ்சி
வங்கியில் வைப்பதும்
எங்களின் இன்றைய
வாழ்வாகிப் போச்சு!

(சுடர்ஒளி)

## கிளிநொச்சியூர்

வந்தோரை வாழ வைக்கும்
வளம் மிக்க பூமி
விலங்கு வேளாண்மை
வெற்றி தரும் தொழில்கள்
ஆறுகள் குளங்கள்
பல நிறைந்த மருத நிலம்
நெற்கதிர் பயிர்கள்
செழித்திடும் வயல்கள்
உழவர் வியர்வை சிந்திய நிலங்கள்
உத்தமர் விதையாய் சரிந்த ஊர்கள்
கலாசாரம் பண்பாடு குன்றா
செந்தமிழர் தேசம்
சீரிய தமிழால் சிரித்திடும் மனங்கள்
பெருந்துன்பம் கண்ட போதும்
மீண்டெழுந்த மேன்மையூரே
மகத்தான கிளிநொச்சியூர்!

(கரைச்சி எழில் சஞ்சிகை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரணம் யார்?

ஆள்பாதி ஆடைகட்டி
அங்கங்கள் வெளிக்காட்டி
அதரத்தில் வர்ணம் தீட்டி
நாகரிகத் தோரணையில்
நளின நடை நடந்து
நகைப்புக்கு இடமளித்து
குதிக்கால் செருப்பணிந்து
குணப் பெயர் தனைமறந்து
குதிரைபோல் வலம் வந்து
கையில் பேசியுடன்
கடைத்தெரு போகையிலே
காளையர் கண்கள்
கட்டெறும்பாய் மொய்க்கிறது
கன்னியர் மீதினிலே!
கலாசார மீறலுக்கு
கனிகையரும் காரணமா?(ம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைக்கலாமா?

நிலவுகாட்டி சோறூட்ட
நினைக்காதே அம்மா
யதார்த்தங்களை நோக்கி
எதார்த்தமில்லாது
கற்றுத்தா எனக்கு!

பொய்யர்களை
போலிகளை
தோலுரிப்ப தெப்படி?
ஏமாற்றுப் பேர்வழியை
தோற்கடிப்ப தெப்படி?

கல்நெஞ்சக் காமுகரிடமிருந்து
தப்பிப் பிழைப்பதெப்படி?
இப்போ சொல்
இனியும் நிலவுகாட்டி நீ
சோறூட்ட நினைக்கலாமா?

(வலம்புரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னவர் நினைவுடன்

என் மனதுடன்
ஒன்றக் கூடிய ஒருவனுக்காய்
சாதி மதம் எனச் சகலதும்
சரிபார்த்து - தொழில்
மாத வருமானம் பார்த்து
பெரிய எழுத்தில் பெயரிட்டு
அழைப்பாணைகள் பல அனுப்பி
அலங்கரிக்கப்பட்ட
அம்மன் சிலையாய்
அவனருகில் நான்....

இளமையின் எல்லை கடந்த
எண்ணங்கள் - இப்போ
எனக்கில்லை
ஊருக்கும் பேருக்கும்
உதிர்த்தப்பட்ட சடங்குகளில்
எள்ளளவும் நம்பிக்கை எனக்கில்லை .....

அன்புள்ளது புரிந்து கொள்
பண்புள்ளது பழகிக்கொள்
மனப்பூர்வமானால்
மனுசியாய் ஏற்றுக்கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமுடைந்து விழிகசிந்தால்
கண்ணீர் துடைத்து சற்று
கட்டியணைத்துக்கொள் - உன்
ஏற்ற இறக்கங்களில்
என்றும்
இணைந்திருப்பேன் உற்ற தோழியாய்!
காணாமல் போன என்
காதலன் நினைவுடன் ....

(உதயன்)

## எமக்காகவும்

பல துறைக்கும்
பல சுவைக்கும்
பகுதி பிரிக்கும் - பல்
தேசிய இதழ்களே...
பணிவுடன் வேண்டுகிறோம்!!
சிறைக் கூண்டிலிருந்து
நாம் வரையும்
பெருந் துன்பங்களை
சின்னதாயேனும் பதித்து
தட்டிக் கொடுப்பீர்களா?
இல்லை
தட்டிக் கழிப்பீர்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலைத் தேடும் இரவுகள்

பயன்படாத
வயல்களின் எதிர்பார்ப்பாய்
விடுதலை தேடும் - எம்
விழிகள்!
விடியாத இரவுகளை விரட்டி
வாழத் துடிக்கும் வசந்தங்களாய்
அரசியல் கைதிகள்!

அரசியல் ஆதாயம் தேடும்
அரசும்
அரசியல் வாதிகளும்!
பெற்றவர்
குடும்பங்கள் பேரெதிர்ப் பார்ப்புடன்!
போரும் முடிந்தது
பொழுதுகளும் விடிந்தன
எங்கள் இருள் வாழ்வு
எப்போ வி(மு)டியும்?

(சுடர்ஒளி, உதயன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிப்பிறப்பு

முன்னைநாதர் கொடியேறி
கதிர்காமத்தார் தீர்த்தமாடி
நல்லூரான் மஞ்சள் மாலை சூடி
மாவிட்டபுரம் கந்தன் வரை
அருள் மழை பொழியும்
ஆடிப்பிறப்பினை ஆராத்தி வரவேற்போம்!

ஆடிப்பிறைதனை தேடிப் பார்த்திடுவோம்
ஆடிச் செவ்வாய் நோன்பிருந்திடுவோம்
ஆடிவேல் விழா கண்டிடுவோம்
முள் கிழுவை முருங்கை நாட்டிடுவோம்
நாயன்மார் குருபூசை நடத்திடுவோம்!

பிதாவையிழந்த பிள்ளைகள்
அன்னாரது ஆத்மாவிற்கு ஆடி
அமாவாசை நோன்பிருந்து
அஞ்சலித்து ஆற்றுப்படுத்தும்
ஆடிப்பத்து நந்நாள்!
ஆடிப்பிறப்பன்று நாம்
கூடிக் குடித்து மகிழ்வோம்
ஆடிக் கூழினையும் - அதன்
அறுசுவையினையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிப்பட்டங்கள் கட்டி
ஆகாயம் தொட்டிட விட்டு
ஆடவர் மங்கையர் நாம்
குதூகலித்து கொண்டாடுவோம்!

நவாலியூர் புலவரின்
நாவீண்ற வரிகளை
நாம்பாடி மகிழ்ந்திடுவோம்
ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தம் தோழர்களே!

## ஆளுக்கொரு மரம் நடுவோம்

மரங்களை நாட்டிடுவோம்
மக்களை காத்திடுவோம்
இன்று விதைக்கும் விதைகள்
எந்நாளும் வழங்கும் பயன்கள்
காணி நிலம் சேர்த்திட
காடுகளை அழித்து நாளை
காணாமல் போக்கிடாதீர்
மானிட இனமதை

இனமத பேதமின்றி
வனவளம் காத்திடுவோம்
போர் தின்ற பனைகளைநாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் நாட்டிடுவோம்
சுயநலப் போக்கினில் சொந்த மண்ணை
சுடுகாடாய் மாற்றிடாதீர்
வருங்கால சந்ததி இடுகாட்டில் வாழ
நீவீர் வழி காட்டிடாதீர்

மூன்றரை தசாப்த காலமதில்
மண் தின்ற விதைகள் ஏராளம்
மரணித்த மரங்கள் தாராளம்
மறுபடியும் விதையிடுவோம் பூமியதில்

கார்த்திகை காலமதில்
நாடு வளம்பெற காடு வளர்த்திடுவோம்
மீள் உருவாக்குவோம்
மீள் நடுகைத் திட்டமதை

ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
வடகிழக்கின் பசுமைப் புரட்சி
வளமான வாழ்வின் எழுச்சி

("கார்த்திகை மரநடுகை மாதம்" - 2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகிழியும் சிறு முத்துக்கள்

அயல் வீட்டு ஆயாவிடம் சோறுண்டு
வாயருகே ஒட்டிக்கிடக்கும்
வெள்ளை பருக்கையுடன்
வெளியே வரும் ஏழைச்சிறுமியை
எட்டிக்குதித்து அழைக்கிறது
எதிர் வீட்டு ஏழை நாய்...

கையேந்தும் பிச்சைத் தட்டுக்கு
சில்லறை எச்சம் இடமறுக்கும்
பணக்காரப் பயணிகளும்
தலையாட்டிச் சிரிக்கிறார்கள்
பிச்சைப் பையனின்
பாட்டிற்கும் தாளத்திற்கும் ....

மண்ணில் சோறு ஆக்கி
மர இலைகளில் கறி சமைத்து
பரிமாறும் சிறுகுழந்தை மணி
பன்னிரண்டை தாண்டியதும்
பசியென்று அழுகிறது தாயிடம் சென்று!

(உதயன் - சூரியகாந்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தித்துப் பார்

இரு இனமென்றாலும் - நம்
இரத்தம் ஒன்றுதான்
நிறத்தில்

இரு மொழியென்றாலும் - நம்
குணவியல்பு ஒன்றுதான்
நிஜத்தில்

இரு பண்பாடென்றாலும் - நம்
தாய்நாடு ஒன்றுதான்
உலகில்

இரு கலாசாரம் என்றாலும் - நம்
வாழ்வியல் ஒன்றுதான்
நாட்டில்

சிங்கள சகோதரா சிந்தித்துப்பார்
பிரிவினை யகற்றி
பெருமையோடு வாழ்வோம்

(தினகரன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதமுடியா நினைவுகள்

சுதந்திரமாய் வன்னியில்
சுற்றித் திரிந்த நாட்கள் .....
நிலவொளியில் நிம்மதியாய்
கதையளந்த பொழுதுகள்....
காதலியின் கரம்பிடித்து
நடந்த குச்சொழுங்கைகள்....
அகப்பை யேந்தி அம்மா
அடிக்க வருகையில்
ஓடித் தப்பும் கோடிப்பக்கம் .....

அப்பப்பா ஆயிரம் நினைவுகள்
ஆயினும் அவைகளை
எழுத முடியாத ஏக்கங்கள்
எட்டி தடுக்கின்றன ......
இற்றைகளில் மனதில்
இன்ப நினைவுகளை விட
துன்ப வடுக்களே
நிரம்பித் தளம்புகிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித(ர்) நிலம்

புனிதர்கள் துயிலும்
பூங்காக்கள் புழுதியாகலாம்
தூசு படாத பிறவிகளில் - என்றும்
மாசு படிவதில்லையே....

கல்லறைகள் தகர்ந்தாலும்
களத்தடங்கள் அழிவதில்லை
விதையான புனிதர்கள் - என்றும்
சிதையாத சிற்பங்கள்....

புறச்சுடர்கள் அணைந்தாலும் - மனதின்
அகச் சுடர்கள் அணைவதில்லை
அமைதியாய் துயிலுங்கள்
அற்புத பிறவிகளே
ஆண்டவன் படைப்புக்களே!

(உதயன், சூரியகாந்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயம்

காற்றும் புக மறுக்கும்
கரிய அறைகளுக்குள்
காவலர்கள் ஏவலர்கள் மத்தியில்
எத்தனை தடவைகள்
விசாரணையோ விடுதலையோ கேட்டு
உத்தமர் வழியில்
உண்ணாமல் இருந்தோம்!

இதயமோ அன்றி இரக்கமோ
இல்லாத
ஜனநாயக வாதிகள்
வாய்மூடி மௌனிகளானார்கள்!
மறக்க முடியவில்லை
இதுதான் எம் தேசத்தின்
மனிதநேயம்.!

(தினக்குரல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுவலக நாட்கள்

புஸ் என்று காற்று வரும்
அந்த
சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக
முன் அறை முகப்பிலே
தேன்சுவை காய் சொரியும் மா மரம்....
அதனருகில்
புலினிக்குருவி படையெடுக்கும்
பூவரசு வேலி....
பள்ளிப் பிள்ளைகள் பார்த்து அலறும்
பாடசாலைப் பற்சிகிச்சைக் கூடம்
இடப்புறம்....
அலுவலகப் பெண்களாய்
கலகலக்கும் அழகான வேம்புகள்
பின்புறம்....
காற்றோடு மண் தூசி
வண்ணத்துப் பூச்சியும் வந்துபோகும் -எம்
ஒன்றுகூடல் ஓலைக் கொட்டில்....
இவையெல்லாம் நினைவில் மட்டுமா?
இல்லை
நிஜத்தில் மீண்டும் கிட்டுமா?

அலுவலக முன்றலும்
ஆரத்தழுவும் தென்றலும்
வார்த்தைகளின்றி வழியனுப்பிய நினைவு.....
போர்க்கால மானாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையாய் பணிதொடர்ந்த பொழுதுகள்....
மருத்துவ முகங்கள் யாவிலும்
சந்தோசம், மகிழ்ச்சி
கைகளை உயர்த்தி கரகமாடியது....
ஐந்து வருட அலுவலக நகர்வில்
ஐந்நூறு உறவுகள் ஐயாயிரம் நினைவுகள்....
வரப்போகும்
ஐம்பது வருட வரட்சியை
தாங்குமோ தெரியவில்லை - இருந்தும்
தினம் தினம் நனைகின்றேன்
நினைவில்!

(சுகாதாரத்துறையில் பணிபுரிந்த
பசுமையான நினைவுகளுடன்)

## காதல் மொழி

காதலிக்கையில்
காளையர் கவிதையில்
கண்ணே ... மணியே ..
கற்பூர வள்ளியே ...
முத்தே ... மரகதமே ..
மாணிக்க வைரமே ..

இவையனைத்தும் - தாலி
கட்டியபின் கணவனின் மொழியில்
காணாமல் போகும் புனைபெயர்கள்

(மித்திரன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைந்த இருமனங்கள்

என்னவளே
வழிமறிப்புத் தாக்குதலில் - நீ
தகர்த்தெறிந்தாயாமே
அப்படி இல்லையடி

வல்லரசுகளின் கூட்டு
வழித்தடத்தை சிதறடித்தாய்

எனக்குக் கிடைத்த வார இதழ் செய்தி
அதை வழி மொழிந்தது

இனியவளே
கழுத்தில் தொங்கிய நஞ்சு மாலையும்
இடையில் கிடந்த
இலக்கத் தகடும் தான்
இணைத்தது நம் இருவரையும்

இருந்தும் இப்போ பிரிந்திருக்கின்றோம்
"முன்னாள் போராளி" என்ற
முன்னொட்டுக்களுடன்
பூசா முகாமுக்குள்

(சுடர் ஒளி)

# வாழ விடு

அதிகாரம் மிக்க அரசாங்கமே
உங்களின் காட்சிப் பொருட்களாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூண்டுக்குள் நாங்களின்று
அடைக்கப்பட்டு அல்லற்படுகின்றோம்
அரசியல் கைதிகளாய்!

யுத்தம் முடிந்து ஐந்தாண்டு
சத்தம் இன்றி நம்நாடு
நல்லிணக்கம் சமாதானம்
நாளிதழ் தலைப்புகளின்று
இப்படி இருக்கையில் - நாம்
இரும்புக் கதவுக்குள் கிடப்பது
எப்படி நியாயமாகும்?

ஆங்கிலேய சிறைக் கூடங்கள்
இன்றைய வதைக் கூடுகள்
என்றிவைகள் மாறுவது
சீர்திருத்தப் பள்ளிகளாய்?
சனநாயக இலங்கையே
சனத்திடம் கூறு - நாம்
சிறைக்குள் சிதைவதற்குள்!

பயங்கரச் சட்டங்களின்
பயனாளிகள் யாரோ
பாதிக்கப்படுவது ஓரினமல்லவா?
ஏனிந்த எதிர்பரிணாமம்?
அதிகாரம் மிக்க அரசாங்கமே
எங்களையும் வாழவிடு
இந்த மண்ணில் நிம்மதியாய்

(சுடர்ஒளி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருடல்

புளியம் பொக்கணை
திருவிழாக் கடையில் - தன்
மகளுக்கு
தண்ணீர் துப்பாக்கி கூட
தட்டுப்பட வேண்டாமென
எண்ணுமோர் அம்மா....

எமதூர் பாதைகளில்
எந்நேரமும் துப்பாக்கிகளுடன் அலையும்
கவச காக்கிகளை காண்பதாலும்
அமைதியை அஸ்தமிக்கும்
வேட்டொலிகளை கேட்பதாலும்
இப்போ அவள்
தண்ணீர் துப்பாக்கி கேட்டு
அடம் பிடிப்பது அதிகமாகி விட்டது ...

மகளின்
எதிர்காலம் பற்றிய கேள்விகளில் - இப்போ
நாட்களெல்லாம்
ஆரவாரமாகவே மறைகிறது.

(உதயன், சூரியகாந்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி

சொல்வழி கேளாமல்
செய்த குழப்படிக்கு
சிறு நெல்லித் தடியெடுத்து
செல்ல மகளின் காலில்
சின்னதாய் அடித்த எனக்கு ...
அவள்
அப்பாவியாய்
உறங்குவதைப் பார்க்கையில்
உள்ளம் வலிக்கிறது.

(மித்திரன்)

# வேறுபாடு

மனித
சிற்பங்களைச் செதுக்கி
உயிரோட்டம் காணத் துடிக்கிறான்
சிற்பக்கலைஞன்
அங்கு

சிலைக்கு எப்படியெல்லாம்
பேரினவாதம் பருக்கி
பெரும்பான்மை காட்டலாமென
சிந்திக்கிறான் இனவாதியொருவன்
இங்கு

(உதயன் - 10.02.2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைக்கூ

| | |
|---|---|
| **கன்னக்குழி** | பொன்னான<br>புன்னகையின்<br>பிறப்புறுப்பு |
| **வியர்வை** | உழைப்பாளியின்<br>உடல் சிந்தும்<br>கண்ணீர்த்துளி |
| **தூக்கம்** | இமைகள் இரண்டும்<br>இல்லறம் புரியும்<br>இனிய காலம் |
| **கனவு** | நினைவுலகில்<br>நனவுகளின்<br>நிழல்கள் |
| **கண்ணீர்** | பாவப்பட்டவர்களின்<br>பருவகாலமில்லா<br>மழைத்துளி |
| **செவி** | செலவை வைக்கும்<br>செல்பேசிகளின்<br>செல்லத்தோழி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்னை**

இரத்தமதைபாலாக்கி
இதயம் வளர்க்கும்
உதயசூரியன்

**இல்லறம்**

இனிமையான
இரு உள்ளங்களின்
ஒற்றைப் பிறவி

**குழந்தை**

இரு உயிர்களின்
இல்லற விளையாட்டின்
இறுதிப் பெறுபேறு

(சுடர்ஒளி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவனும் நானும்

அவன்
வேலைக்குச் சென்றான்
நானும்
வேலைக்குச்சென்றேன்
அவனுக்கு ஊதியம்
எனக்கு உணவு மட்டும்
அவன் வீட்டுக்குச் சென்றான்
நான் விடுதிக்குச் சென்றேன்
அவனை வரவேற்றது
மனைவி மக்கள்
என் வரவைப் பார்த்தது
என் சக கைதிகள்
அவன் வீட்டை அழகுபடுத்துகிறான்
நான் விடுதியை அழகுபடுத்துகிறேன்
அவனிடம் வேஷம் இருக்கிறது
என்னிடம் பாசம் இருக்கிறது
ஈழத்தேசம் மீதும் எம் மக்கள் மீதும்!
அவனது புகழ்
அரச விசுவாசி
எனது இகழ்
அரச துரோகி
ஆடம்பர வீட்டில் அவன் குடும்பம்
அகதி முகாம் கொட்டகையில்
என் குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தன்மானம் விற்றான்
நான் தமிழ் மானம் காத்தேன்
அவன் ஏசி அறையில்
நானோ தூசி அறையில்
பத்திரிகைப் பக்கத்தில்
அவன் மாலையுடன்
நான் கைவிலங்குடன்
அவனும் ஈழத்தமிழனே
நானும் ஈழத்தமிழனே.

## கௌரவச் சிறை

திருடன் அனுபவிக்கும்
அதே பிரச்சினைகளை
சிறைக்காவலனும்
அனுபவிக்கிறான்!
ஆனாலும்
இவனது துயரம்
கொஞ்சம் கௌரவமானது
அவ்வளவு தான்!

(தினக்குரல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடிப்பு

பிரசவம் பார்த்து
மீன்களைப் பேணி வளர்த்த கடலன்னை
காற்றை கடன்வாங்கி
பேறலையாய்ப் பெருகி
ஓர் நாள் அதை
கரையில் தூக்கியெறிந்துவிட்டு
கவலையே இன்றிப் போய்விட்டது!

மீன்கள் வாலை அடித்தடித்துத்
துடியாய்த் துடிக்கின்றது
தூக்கியெறிந்துவிட்டுப் போன அலையின்
இரக்கமற்ற செயலை எண்ணி

துடிப்பதென்னவோ
இன்றுகளில் மீன்கள் மட்டுமா?
இல்லவேயில்லை
இளம் பெண்களும் தான்

இவர்களையும் இவாறுதான்
இரக்கமற்ற கொடிய போர்
தாலிகளை பறித்துக் கொண்டு
அந்தக் கடலலை போல்
அநாதரவாய் தூக்கியெறிந்துவிட்டு
முள்ளிவாய்க்காலோடு போய்விட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனை தூக்கியெறிந்த கடலலைகள்
மீண்டும் வந்து
துடித்துக் கொண்டிருக்கும் மீனை
தரைதடவி அரவணைத்து
தன்னோடு கூட்டிச் செல்வது போல்...

துயரில் துவண்டு கொண்டிருக்கும்
கைம்பெண்களையும்
துனைகள் மீண்டு(ம்) வந்து
கூட்டிச் செல்லுமா - இல்லை
இரக்கனுள்ள இன்னுமொரு துணை
இவர்களின் துயர் துடைக்குமா?

(உதயன், சூரியகாந்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியலின் உணர்வு வரிகள்



வடபுலத்தின் கிளிநொச்சி மண் தந்த கவி ஆளுமைகளில் செல்லையா சதீஸ்குமார் என்னும் இயற்பெயர் கொண்ட "விவேகானந்தனூர் சதீஸ்" அவர்களும் ஒருவர். கவிரசனை, நீண்ட கால வாசிப்பு, தேடல், அனுபவங்கள் ஊடாக இவரின் கவிதை எழுதும் ஆற்றல் உருப்பெற்றுள்ளது "சிறைச்சாலை மனிதனின் சிந்தனைச்சாலை " என்பார்கள் கொழும்பு புதிய மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சதீஸின் கவிதைகள் இச் செயலை மெய்ப்பிப்பதாக உள்ளது. அது வெளி உலகுக்கு வந்து வாழ வேண்டுமென்கின்ற அவரது உணர்வின் வெளிப்பாடாக "விடியலைத் தேடும் இரவுகள்" எனும் தலைப்பில் மலர்ந்துள்ளது. மன உணர்வுகளை இவர் வெளிப்படுத்தும் விதம் அழகானது

இவர் தனது கவிதைகளை நாட்டின் தேசிய, பிராந்திய பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்பி அவை பிரசுரமாகியமை ஓர் தனித்திறமைதான். கவிதைகளோடு மட்டும் நின்று விடாது கட்டுரை, சிறுகதை, விமர்சனம் எனப் பல துறைகளில் தன்னை ஈடுபடுத்தி வரும் சதீஸை "வாழ்வின் ஒவ்வொரு மணித்துளியும் பயனுள்ளதாக்கும் மனிதர்களில் இவரும் ஒருவர் எனக் கருதலாம்" வாழ்வின் அனைத்து தளங்களையும் தரிசித்த இவரது கவிதைகள் வாசிப்புக்கு உகந்தவை. இடைவிடாத எழுத்துப் பயணத்துக்கு இன்னும் பல நூல்களை இவரிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.

**திரு வேதநாயகம் தபேந்திரன்**
**"தேன் தமிழ்"**
**கைதடி வடக்கு,**
**யாழ்ப்பாணம்**

ISBN 978-995-54448-2-8

9 789555 444828

தேவி Printers, Jaffna. 021 300 3030

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org